கூட்டம் எண்.19

நாள். 31.10.2019
பூவிருந்தவல்லி நகராட்சி

<u>சாதாரண கூட்டம்</u>

<u>முன்னிலை :- திரு.இரா. டிட்டோ , பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர்</u>

பூவிருந்தவல்லி நகராட்சி தனி அலுவலர் சாதாரண கூட்டம் 31.10.2019 காலை 11.00 மணிக்கு நடத்தப்பட்டது. அது சமயம் பொறியாளர், நகரமைப்பு ஆய்வர், வருவாய் ஆய்வர், துப்புரவு ஆய்வர் மற்றும் மேலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**ஆணையர் (ம) தனி அலுவலர்**
**பூவிருந்தவல்லி நகராட்சி**

**பொருள் எண்.1**

பூவிருந்தவல்லி நகராட்சி பகுதிகளில் அதிக அளவில் அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக வளாகங்கள், தொழிற்சாலைகள் என அதிக அளவில் வளர்ச்சி அடைந்து வருவதாலும் தற்போது நகராட்சி பகுதிகளில் மழைநீர் கால்வாய் திட்டப்பணிகள் மற்றும் வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணிகள் நடைபெற்று வருவதால் சாலைகள் மிகவும் சேதமடைந்துள்ளபடியால் இவைகளை சீரமைக்கும் பொருட்டு நகராட்சியினால் பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அத்தியாவசியப் பணிகளில் ஒன்றான சாலை வசதிகள் செய்ய வேண்டியுள்ளதால், தற்போது நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால் பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலும் தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் 2019–20–ன்கீழ் (TURIP – 2019-20) கீழ்கண்டுள்ள பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்யவும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| சிப்பம் எண். | பணியின் விவரம் | நீளம் கி.மீ | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | முத்தமிழ் நகர் பிரதான சாலை, 1வது மற்றும் 2வது தெரு, திருமால் நகர் 7 முதல் 10வது தெரு வரை, கீழ்மா நகர் பிரதான சாலை, முனிகிருஷ்ணா நகர் பிரதான சாலை, விக்னேஷ்வரா நகர் பிரதான சாலை, எம்.எஸ்.வி.நகர் 1வது, 2வது, 3வது தெருக்கள், சிப்பாய் லைன் 3வது மற்றும் 4வது தெருக்கள், அம்பாள் நகர் பிரதான சாலை மற்றும் 1வது, 2வது, 3வது குறுக்கு தெருக்கள், சி.ஆர்.எம். நகர் குறுக்கு தெரு, அஷ்டலட்சுமி நகர், ஆர்.சி.எம். பள்ளி சாலை, கங்கையம்மன் கோயில் தெரு, கோரிமேடு சாலை, அம்பாள் நகர் பேஸ் – II பிரதான சாலை ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைத்தல் மற்றும் பெருமாள் கோயில் தெரு, பாரதி தெரு 1வது தெரு முதல் 4வது தெரு வரை, பஜார் தெரு மார்கெட் தெரு ஆகிய தெருக்களுக்கு பேவர் பிளாக் சாலை அமைத்தல் மற்றும் முத்தமிழ் நகர் பிரதான சாலை, கீழ்மா நகர் பிரதான சாலை, முனிகிருஷ்ணா நகர் பிரதான சாலை, கோரிமேடு சாலை, அம்பாள் நகர் பேஸ் – II பிரதான சாலை, பஜார் தெரு, மார்கெட் தெரு வரையில் கால்வாய் மேல்மூடி அமைத்தல். | 3.784 | 200.00 |
| 2 | சக்ரமங்களா நகர், மல்லிகை அவென்யு, மல்லியம் நரசிம்மன் நகர் பிரதான சாலை மற்றும் 1வது, 2வது, 3வது தெருக்கள், மோகனா நகர், வைதீஸ்வரன் கோயில் தெரு, பிள்ளையார் கோயில் தெரு, ஆஞ்சநேயர் கோயில் பிரதான சாலை, எஸ்.பி.அவென்யு 1வது தெரு, பத்மாவதி நகர் பிரதான சாலை மற்றும் 3வது, 4வது தெரு, விருஷ்ணவி நகர் 1வது, 2வது தெருக்கள் மற்றும் ஜே.சி.என். தெரு ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைத்தல். | 3.328 | 200.00 |

**அலுவலக குறிப்பு:**

1. ஒப்புதல் வழங்கலாம்.

2. மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 28, அவர்களுக்கு கருத்துருவினை அனுப்பிட மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1135/2019/இ1)

**பொருள் எண்.2**

இந்நகராட்சி எல்லை பகுதியான வார்டு எண்.2 ல் இணைப்பு சாலையில் உள்ள RRB நிறுவனம் இயங்கி வருகிறது. மேற்கண்ட நிறுவனம், சொத்துவரி மற்றும் தொழில்வரி ஆகிய வரி இனங்கள் செலுத்தாமல் நிலுவை வருவதை தொடர்ந்தும், மேலும் நகரமைப்பு பிரிவிற்கு OSR காலியிடம் ஒப்படைக்காமல் (அ) அதற்கான தொகையினை செலுத்தாமல் காலம் தாழ்த்தி வருவதால் சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்க இந்நகராட்சி சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.சீனிவாஸ் அவர்களை சந்தித்து சட்ட கருத்துரு கோரப்பட்டன. மேற்கண்ட சட்ட கருத்துரு வழங்கப்பட்டமைக்கான செலவுத் தொகை கோரி 28.09.2019 மற்றும் 19.10.2019 ந் தேதிகளில் ரூ.3000 + ரூ.5000 ஆக மொத்தம் ரூ.8000/– க்கு கடிதம் வரப்பெற்றுளன. மேற்படி சட்ட கருத்துரு செலவினம் ரூ.8000/– யை பொது நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1157/18/அ1**

**பொருள் எண்.3**

பூவிருந்தவல்லி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019–20ம் ஆண்டிற்கான கீழ்கண்டுள்ள பணிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவள்ளூர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.2156/2019/அ10, நாள்.21.10.2019–ல் நிர்வாக அனுமதி வரப் பெற்றுள்ளது. இதனை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | 19–வார்டில் அடங்கிய சுந்தர் நகர் பூங்கா அருகில் புதிய 3,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டி கட்டுதல். | 35.00 |
| 2 | பூவிருந்தவல்லி நகராட்சியில் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் குடிநீர் சுத்திகரிப்பு கலன் அமைத்தல். (R.O.Plant) | 3.00 |
| 3 | பூவிருந்தவல்லி நகராட்சியில் அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் குடிநீர் சுத்திகரிப்பு கலன் அமைத்தல். (R.O.Plant) | 3.00 |

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1579/2019/இ1)**

**பொருள் எண்.4**

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்களின் **04.10.2019** தேதிய காணொளி காட்சி அறிவுரைகளின் படி **2019–ல்** நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தலை முன்னிட்டு, பூவிருந்தவல்லி நகராட்சியில் உள்ளாட்சி தேர்தல் பணி நடத்திட தேவையான தேர்தல் செலவினங்கள் கீழ்காணும் விவரப்படி மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.**40.00** லட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1) வாக்காளர் பட்டியல், வேட்பாளர் பட்டியல் சீட்டுகள், போஸ்டர்கள் மற்றும் எழுது பொருட்கள் செலவினங்கள்.
2) தேர்தல் பொருட்கள் வாங்குவதற்கான செலவினங்கள்.
3) தேர்தல் பயன்பாட்டிற்கான வாகனங்கள், எரிபொருள், ஓட்டுநர் ஊதியம் மற்றும் படிகள் உட்பட.
4) தேர்தல் பணிக்கான அலுவலர்கள், பணியாளர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், மண்டல அலுவலர்கள், தேர்தல் பணி உதவியாளர்கள் அனைவருக்குமான மதிப்பூதிய செலவினங்கள்.
5) வாக்கு எண்ணிக்கை பாதுகாப்பு அறை மற்றும் கண்காணிப்பு கேமரா, மின்விளக்குகள், நாற்காலிகள் செலவினங்கள்.
6) தொலை தொடர்பு வசதி மற்றும் இணையதள வசதி செலவினங்கள்
7) தேர்தல் விழிப்புணர்வு விளம்பரம் மற்றும் இதர செலவினங்கள்.
8) ஜெராக்ஸ் மற்றும் தட்டச்சு செலவினங்கள்.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட **2019** ஆம் ஆண்டு உள்ளாட்சி சாதாரண தேர்தலுக்கான செலவினத்திற்கும், தோராய மதிப்பீட்டு தொகை ரூ.**40.00** லட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.325/2019/சி1**

**பொருள் எண்.5**

பூவிருந்தவல்லி நகராட்சியின் தினந்தோறும் சேகரமாகும் மக்காத மற்றும் பயன்படுத்த முடியாத குப்பைகளை அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்கு வாடகை டிப்பர் வாகனம் மூலம் ஒப்பந்தப்புள்ளிக்கோரி அனுப்பிவைக்க தனிஅலுவலர் கூட்ட தீர்மானம் எண்.70, நாள்.30.09.2019-ல் ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து. 18.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் பின்வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் திருவாளர் / திரு | PER TRIP ஒப்பந்த தொகை ரூ. | ஒப்பந்த விகிதம் சதவீதத்தில் |
|---|---|---|---|---|---|
| 1. | நகராட்சியில் தினந்தோறும் சேகரமாகும் மக்காத மற்றும் பயன்படுத்த முடியாத எரியக்கூடிய தன்மையுள்ள குப்பைகளை அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்கு கனரக வாகனம் மூலம் எடுத்து செல்லுதல் | 10.00 | 1) ஓம்சக்தி எண்டர்பிரைசஸ் | 41xரூ.24000/- 984000/- | 1.60% குறைவு |
| | | | 2) ராதா டிரான்ஸ்போர்ட் | 41xரூ.25000/- 1025000/- | 2.50% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள எம்/எஸ்.ஓம்சக்தி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க தனிஅலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுலவலக குறிப்பு**

1) அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**ந.க. எண்.602/2018/எச்1**

**பொருள் எண்.6**

பூவிருந்தவல்லி நகராட்சியின் பசுமை உரக்குடில் மையங்கள் மற்றும் பொதுக்கழிப்பிடங்களில் துர்நாற்றங்கள் வராமல் தடுக்க தேவையான லெமன் கிராஸ் திரவியம் ஒப்பந்தப்புள்ளிக்கோரி வாங்கிட தனிஅலுவலர் கூட்ட தீர்மானம் எண்.75, நாள்.30.09.2019-ல் ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து. 18.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் பின்வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் திருவாளர் / திரு | ஒப்பந்த தொகை ரூ. | ஒப்பந்த விகிதம் சதவீதத்தில் |
|---|---|---|---|---|---|
| 1. | பூவிருந்தவல்லி நகராட்சியின் பசுமை உரக்குடில் மையங்கள் மற்றும் பொதுக்கழிப்பிடங்களில் துர்நாற்றங்கள் வராமல் தடுக்க தேவையான லெமென் கிராஸ் விநியோகம் செய்தல் | 10.00 | 1) சிவம் டிரேடர்ஸ் | 350லிட்டர் x2800/- 980000/- | 1.75% குறைவு |
| | | | 2) ஸ்ரீபிளாஸ்டோ டெக் | 350லிட்டர் x2950/- 1032500/- | 3.51% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள எம்/எஸ்.சிவம் டிரேடர்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க தனிஅலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுலவலக குறிப்பு**

1) அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**ந.க. எண்.1699/2017/எச்1**

**பொருள் எண்.7**

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் பூவிருந்தவல்லி நகராட்சியின் 21 வார்டுகளிலும் சேகரமாகும் குப்பைகளை அகற்றிட 6 எண்ணிக்கை டிராக்டர் வாடகை அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிக்கோரி அமர்த்திக்கொள்ள தனிஅலுவலர் கூட்ட தீர்மானம் எண். , நாள்.30.09.2019-ல் ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து. 30.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் பின்வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் திருவாளர் / திரு | ஒப்பந்த தொகை ரூ. | ஒப்பந்த விகிதம் சதவீதத்தில் |
|---|---|---|---|---|---|
| 1. | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் தினந்தோறும் சேகரமாகும் குப்பைகளை அகற்றிடவும் மற்றும் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளுக்காக வாடகை அடிப்படையில் டிராக்டர் சப்ளை செய்தல். | 9.00 (ரூ.2500x6 டிராக்டர் x 60 days) | **(ஒரு டிராக்டர் ஒருநாள் வாடகை ஓட்டுநருடன்)** | | |
| | | | 1) ஸ்ரீசாய்ராம் எண்டர்பிரைசஸ் | 2400/- | 4.00% குறைவு |
| | | | தி காட்பாடி அக்ரோ இன்ஜினிரிங் & சர்வீஸ் கோ–ஆப்ரேடிவ் சென்டர் லிட்., காட்பாடி, வேலூர்–632 007. | 2450/- | 2.00% குறைவு |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள எம்/எஸ். ஸ்ரீசாய்ராம் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க தனிஅலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுலவலக குறிப்பு</u>**

1) அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**<u>ந.க. எண்.1697/2017/எச்1</u>**

**பொருள் எண்.8**

பூவிருந்தவல்லி நகராட்சியின் டெங்கு தடுப்பு நடவடிக்கைக்காக 21 வார்டுகளிலும் உள்ள குடியிருப்புகளில் உள்ள நச்சுநீர்த் தொட்டியில் அமைக்கப்பட்டுள்ள Air Pipe-ல் கொசு வலைகள் கட்டுவதற்கு 10000 எண்ணிக்கை கொசு வலைகள் ஒப்பந்தப்புள்ளிக்கோரி வாங்கிட தனிஅலுவலர் கூட்ட தீர்மானம் எண். , நாள்.30.09.2019-ல் ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து, 30.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் பின்வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் திருவாளர் / திரு | ஒப்பந்த தொகை ரூ. | ஒப்பந்த விகிதம் சதவீதத்தில் |
|---|---|---|---|---|---|
| 1. | டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையாக 21 வார்டுகளிலும் நச்சு வாயு போக்கி குழாய்களில் கட்டுவதற்கு (Septic Tank Air Pipe) தேவையான கொசு வலைகள் சப்ளை செய்தல் | 3.00 | 1) ஸ்ரீசாய்ராம் எண்டர்பிரைசஸ் | ரூ.29/- x 10000 நெ. ரூ.2,90,000/- | 3.33% குறைவு |
| | | | தி காட்பாடி அக்ரோ இன்ஜினிரிங் & சர்வீஸ் கோ–ஆப்ரேடிவ் சென்டர் லிட்., காட்பாடி, வேலூர்–632 007. | ரூ.31/- x 10000 நெ. ரூ.3,10,000/- | 3.33% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள எம்/எஸ்.ஸ்ரீசாய்ராம் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க தனிஅலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுலவலக குறிப்பு</u>**

1) அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**<u>ந.க. எண்.600/2017/எச்1</u>**

**பொருள் எண்.9**

பூவிருந்தவல்லி நகராட்சியின் டெங்கு தடுப்பு நடவடிக்கைக்காக அவுட்சோர்சிங் முறையில் DBC பணியாளர்களை கொண்டு பணி செய்திட தனிஅலுவலர் கூட்ட தீர்மானம் எண். , நாள்.30.09.2019-ல் ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து, 18.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் பின்வருமாறு:-

| வ. எண் | பணி விவரம் | மதிப்பீடு தொகை லட்சத்தில் ரூ. | விடிவெள்ளி ரூரல் டெவெலப்மென்ட் டிரஸ்ட் | விடிவெள்ளி சோஷியல் டெவலெப்மென்ட் சொசைட்டி |
|---|---|---|---|---|
| | | | ஒப்பந்த விலை விகிதம் | |
| **(1)** | **(2)** | (3) | (4) | (5) |
| 1. | பூவிருந்தவல்லி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.**1,2,3,4** மற்றும் **5** ஆகியவற்றில் உள்ள **3327** வீடுகள் மற்றும் அனைத்து நிறுவனங்கள் (புறவழிச்சாலை) ஆகியவற்றில் DBC பணிக்காக தேவைக்கேற்ப பணியாளர்கள் வழங்குவது | ரூ.464/- x 13 DBC x 120 days<br>723840/- | ரூ.462/-x13DBCx 120 days =720720/- மதிப்பீட்டை விட **0.43** % குறைவு | ரூ.463/-x13DBCx 120 days =722280/- மதிப்பீட்டை விட **0.22** % குறைவு |
| 2. | பூவிருந்தவல்லி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.**6,7,8,9** மற்றும் **10** ஆகியவற்றில் உள்ள **3968** வீடுகள் மற்றும் அனைத்து நிறுவனங்கள் ஆகியவற்றில் DBC பணிக்காக தேவைக்கேற்ப பணியாளர்கள் வழங்குவது | ரூ.464/- x 15 DBC x 120 days<br>835200/- | ரூ.462/- x 15 DBC x 120 days =831600/- மதிப்பீட்டை விட **0.43** % குறைவு | ரூ.463/- x15 DBC x 120 days =833400/- மதிப்பீட்டை விட **0.22** % குறைவு |
| 3. | பூவிருந்தவல்லி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.**11,12,13,14** மற்றும் **15** ஆகியவற்றில் உள்ள **3804** வீடுகள் மற்றும் அனைத்து நிறுவனங்கள் ஆகியவற்றில் DBC பணிக்காக தேவைக்கேற்ப பணியாளர்கள் வழங்குவது | ரூ.464/- x 15 DBC x 120 days<br>835200/- | ரூ.462/- x 15 DBC x 120 days =831600/- மதிப்பீட்டை விட **0.43** % குறைவு | ரூ.463/- x15 DBC x 120 days =833400/- மதிப்பீட்டை விட **0.22** % குறைவு |
| 4. | பூவிருந்தவல்லி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.**16,17,18,19.20** மற்றும் **21** ஆகியவற்றில் உள்ள **5840** வீடுகள் மற்றும் அனைத்து நிறுவனங்கள் ஆகியவற்றில் DBC பணிக்காக தேவைக்கேற்ப பணியாளர்கள் வழங்குவது | ரூ.464/- x 15 DBC x 120 days<br>835200/- | ரூ.462/- x 15 DBC x 120 days =831600/- மதிப்பீட்டை விட **0.43** % குறைவு | ரூ.463/- x15 DBC x 120 days =833400/- மதிப்பீட்டை விட **0.22** % குறைவு |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.4ல் கண்டுள்ளவாறு குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ‘‘எம்/எஸ்.விடிவெள்ளி ரூரல் டெவெலெப்மெண்ட் டிரஸ்ட்’’ நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க தனிஅலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுலவலக குறிப்பு</u>

1) அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

<u>**ந.க. எண்.1446/2017/எச்1**</u>

**பொருள் எண்.10**

உறுப்பினர் செயலாளர், சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமம் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண். L1/5729/2019 நாள். 10.10.2019 –ல் பூவிருந்தவல்லி நகராட்சிக்குட்பட்ட பூவிருந்தவல்லி கிராமம் சர்வே எண்.498/1A,1B1A,1B1B,1B2,1C1A, 1C1B, 1C2,1D,1E மற்றும் 1F –ல் அமைந்த மனைப்பிரிவு இடத்தில் சாலைப்பகுதி 6550 சதுர மீட்டர் இடம் நகராட்சிக்கு தானப்பத்திரம் (GIFFT DEED) பதிவு பத்திரம் எண். 2364/2019, நாள்.28.06.2019 செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் இந்நகராட்சியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனை மேற்க்கொண்டு இந்நகராட்சியின் சொத்தாக்கிக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

உறுப்பினர் சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமம் அவர்களின் அவர்களின் . P.P.D.No .108/2019.கடித எண்.L1/5729/2019 நாள். 10.10.2019. தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளதன்படி மேற்படி மனைப்பிரிவு இடத்தில் அடிப்படை வசதிகளான சாலை பகுதிக்காக இடங்களை மனைப்பிரிவு உரிமையாளரால் பதிவு செய்யப்பட்டு இந்நகராட்சியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி பதிவு செய்யப்பட்டுள்ள தானப்பத்திரத்தில் குறிப்பிட்ட இடத்திதை நகராட்சி சொத்தாக்கி கொள்வதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.11**

பூவிருந்தவல்லி நகராட்சி பகுதியில் உள்ள பேருந்து நிலையம் நகராட்சி பராமரிப்பில் இருந்து வருகிறது. தற்போது வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அரசு போக்குவரத்து கழகம் சார்பில் 19.09.2019 மற்றும் 01.10.2019–ம் தேதிகளில் மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் தலைமைச் செயலகத்தில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இதன் அடிப்படையில் பூவிருந்தவல்லி நகராட்சி பேருந்து நிலையம் மற்றும் அதனை ஒட்டியுள்ள பிரதான சாலை புறவழிச்சாலை (NHAI Service Road) வழியாக ஆற்காடு, ஆரணி, வேலூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் மற்றும் ஒசூர் போன்ற ஊர்களுக்கு செல்லும் பேருந்துகள் அனைத்தும் கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்தில் இருந்து புறப்படாமல் பூவிருந்தவல்லி பேருந்து நிலையத்தில் இருந்து இயக்கப்படுவதாகவும், இதனை ஒட்டி பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் வசதி, கழிவறை வசதி பொது சுகாதார பணிகள் மற்றும் கூடுதல் மின்விளக்குகள் பேருந்து நிலையம் மற்றும் சுற்றியுள்ள புறவழிச்சாலைகளில் கடந்த ஆண்டை விட கூடுதலாக அமைத்து தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. எனவே, வரும் ஆயுத பூஜை பண்டிகையை ஒட்டி 04.10.2019 முதல் 06.10.2019 வரையிலும் மற்றும் தீபாவளி பண்டிகையை ஒட்டி 24.10.19 முதல் 26.10.19 வரையில் மூன்று நாட்களுக்கு தினசரி 455, 705, 730 பேருந்துகள் வீதம் கூடுதலாக இயக்கப்படுவதால் கூடுதலாக மின்சார விளக்குகள், ஜெனரேட்டர் இயந்திரங்கள், குடிநீர் தொட்டிகள் மற்றும் தற்காலிக கழிப்பறைகள் அமைக்க கடிதம் எண்.003/DM(optn) /TNSTC(VPM) / 19 நாள்.03.10.2019–ல் கோரப்பட்டுள்ளதால் இப்பணிகளை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள ஆகும் தோராய மதிப்பீட்டு தொகை ரூ.3,00,000/-ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2151/2018/இ1)